இந்த விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் சொல்லும் கருத்தை எதிர்க்கட்சித் தலைவரும் மற்ற தலைவர்களும் மன முவந்து ஏற்றுக்கொவார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு பேச அனுமதிப்பது குறித்து.

திரு. துரை முருகன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர், நான் அருள் கூர்ந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில் இப்படிப்பட்ட நேரத்தில் ஒழுங்குப் பிரச்னை களை எதிர்க்கட்சித் தலைவர் வரிசையில் இருந்து எழுப்புவது என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. மற்றவர்கள் அறையில் வந்து தான் அது குறித்து கேட்க வேண்டும். இது தான் அங்கு எடுக்கப்பட்ட முடிவு.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவைக் காப்பாற்றவேண்டும். இங்கே அந்த மாதிரி பிரச்சனைகளை அனுமதிப்பதற்கு இல்லை.

திரு. துரை முருகன் : சபாநாயகர் அவர்களே, நான் சொல்லி விடுகிறேன். அதற்குப் பிறகு தாங்கள் தீர்ப்பு கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் தான் எனக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, அப்படி முடிவு எடுக்கப்படவில்லை என்று கேள்விப்படுகிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி, நேற்று எடுத்த முடிவு பற்றி நீங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

1979 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

இப்படிப்பட்ட பிரச்னைகள் குறித்து இங்கே ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பக்கூடாது. திரு. அழகர்சாமி அவர்கள் தவறான தகவலைத் தரக்கூடாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவைப்பற்றி எந்தத்தலைவரும் சொல்ல வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய தவறு அல்ல. அந்தந்தக் கட்சித் தலைவர்களை உறுப்பினர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது ; தயவு செய்து உட்காருங்கள்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களது உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், டி. ஞானசிகாமணி ஆகியோர் ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர் களே, திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றி யத்தின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்த பணத்திற்கு கணக்கில் வரவு வைத்து புத்தகம் வழங்காததற்கும், மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும் ஆசிரியர் கள் அனைவரும் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித் துள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர் களே, 20—2—1979 அன்று குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய ஆணையரும், பள்ளித் துணை ஆய்வாளரும் ஆசிரியர்கள் பிரதிநிதி களும் கலந்து, பேச்சுவார்த்தை நடத்தியதன் காரணமாக ஆசிரியர் கள் உண்ணாவிரதத்தை கைவிட்டுவிட்டனர்.